Judicial Form No.53
(See Rule 42 )
**DEPOSITION OF WITNESS**
( Chapter XXIII Code of Cr.P.C )

IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE, ARUPPUKOTTAI

| | | |
|---|---|---|
| Calendar | : | |
| Miscellaneous | : | |
| Preliminary Register | : | |
| Sessions | : | Sessions Case No. 42/2020 |
| Deposition of Witness of PW | : | Prosecution PW 13 |
| | | Defence |
| | | Court |
| Name | : Dr.R.G.Chandramouli | |
| Father / Husband Name | : R.ஞானமணி | |
| Village | : அருப்புக்கோட்டை | |
| Taluk | : அருப்புக்கோட்டை | |
| Caste | : | |
| Calling | : முதுநிலை குடிமை மருத்துவர் | |
| Religion | : இந்து | |
| Age | : 55 | |

( எதிரி ஆஜர். )

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1869 (Central Act 44 of 1969 ) on the 16.09.2025.

**முதல் விசாரணை :-**

1. நான் அருப்புக்கோட்டை அரசு மருத்துவமனையில் முதுநிலை

குடிமை மருத்துவராக பணியாற்றி வருகிறேன். கடந்த 26.02.2019 அன்று இரவு 6.20 மணியளவில் அவசர சிகிக்சை பிரிவில் பணியிலிருந்தபோது சீதாலட்சுமி என்பவர் கண்ணன் என்ற 43 வயது மதிக்கதக்க நபரை சிகிச்சைக்காக அழைத்து வந்தார். கண்ணனை அடையாளம் தெரிந்த ஒரு நபர் தேக்கு கட்டையால் 26.02.2019 அன்று தாக்கியதால் காயம் ஏற்பட்டதாக கண்ணன் அவர்கள் கூறினார். அப்போது நோயாளி சுயநினைவுடன் (concious) மனம் குழம்பிய நிலையில் (Disoriented) இருந்தார். அவரது சுவாசத்தில் மது வாடை அடித்தது. அவரை பரிசோதித்தபோது கீழ்கண்ட காயங்கள் காணப்பட்டன.

i. வலது புற மணிக்கட்டில் 4X3 cm அளவிலான கன்றிய காயம் காணப்பட்டது.

ii. இடது கையில் 5X3 cm அளவிலான கன்றிய காயம் காணப்பட்டது.

iii. இடது புற காலின் நடுப்பகுதியில் 1X1 cm அளவிலான சிராய்ப்பு காயம் காணப்பட்டது.

iv. 3X2 cm அளவிலான கன்றிய காயம் 3 வது காயத்தின் அருகில் காணப்பட்டது.

v. வலது புற இடுப்பில் அழுத்தினால் உணரக்கூடிய அளவு வலி (Tenderness) காணப்பட்டது. அவர் வயிற்றை பரிசோதித்தபோது வலது புற அடிவயிற்றில் அழுத்தினால் உணரக்கூடிய அளவு வலி (Tenderness) காணப்பட்டது.

2. அவரை உள்நோயாளியாக அனுமதித்து சிகிச்சை அளித்தேன். சுமார் 8.15 மணியளவில் நோயாளி கண்ணன் மிகவும் குழப்பமான நிலையிலும், அதிவேகமான மூச்சு இழுப்புடனும் காணப்பட்டார். அவரது நாடி துடிப்பு நிமிடத்திற்கு 96 துடிப்பு என்ற அளவிலும், அவரது இரத்த

அழுத்தம் 90/60 mmHg (millimeter of mercury). அவரது கண் பாப்பா வெளிச்சத்திற்கு எதிர்வினையாற்றியது. அவரது இருதயத்தில் S1, S2 (Sound 1, Sound2) சத்தம் கேட்டது. நுரையீரலை பரிசோதித்தபோது இருபுற நுரையீரலிலும் சளி அடைத்த சத்தம் கேட்டது (Crepitations). அவருக்கு தொடர் சிகிச்சை அளிக்கப்பட்டது.

3. சுமார் 8.20 மணியளவில் நோயாளி கண்ணன் இழுவை மூச்சுடனும், அவருடைய கண் பாப்பா வெளிச்சத்திற்கு மிக மெதுவாக எதிர்வினையாற்றியது. அவரது நாடி துடிப்பு நிமிடத்திற்கு 100 துடிப்பு என்ற அளவிலும், லேசாக உணரக்கூடிய அளவில் தான் அவருடைய நாடி துடிப்பு இருந்தது. அவரது இரத்த அழுத்தம் 70/50 mmHg (millimeter of mercury). அவரது இருதயத்தில் S1, S2 (Sound 1, Sound2) சத்தம் மிக லேசாக கேட்டது. நுரையீரலை பரிசோதித்தபோது இருபுற நுரையீரலிலும் சளி அடைத்த சத்தம் கேட்டது (Crepitations). அவருக்கு தொடர் சிகிச்சை அளிக்கப்பட்டது.

4. சுமார் 8.25 மணியளவில் நோயாளி கண்ணன் இழுவை மூச்சுடனும், அவருடைய கண் பாப்பா வெளிச்சத்திற்கு எதிர்வினை ஆற்றாமலும், அவரது நாடி துடிப்பு உணர முடியாத அளவிலும், அவரது இரத்த அழுத்தம் கண்டுபிடிக்க முடியாத அளவிலும், அவரது இருதய சத்தங்கள் கேட்க முடியாமலும், நுரையீரலை பரிசோதித்தபோது இருபுற நுரையீரலிலும் சளி அடைத்த சத்தமும் காணப்பட்டது. அவருக்கு தொடர் சிகிச்சைகள் அளிக்கப்பட்டன.

5. சுமார் 8.30 மணியளவில் நோயாளி கண்ணன் எந்த விதமான ஒரு மூச்சு அசைவு இல்லாமலும், அவருடைய கண் பாப்பா வெளிச்சத்திற்கு எதிர்வினை ஆற்றாமலும், விரிந்த நிலையிலும் (Dilated) காணப்பட்டது.

அவரது நாடி துடிப்பு உணர முடியவில்லை. அவரது இரத்த அழுத்தத்தை பதிவு செய்ய முடியவில்லை. இருதயம் மற்றும் நுரையீரலிலும் எந்த விதமான சத்தமும் கேட்க முடியவில்லை. அவருக்கு தொடர் அவசர சிகிச்சை அளிக்கப்பட்டும், நோயாளி சிகிச்சை பலனின்றி அவர் 26.02.2019 அன்று சுமார் இரவு 8.30 மணிக்கு இறந்ததாக பதிவு செய்தேன். அவரது உடல் பிணவறையில் வைக்கப்பட்டது. என்னிடம் காண்பிக்கப்படும் விபத்து பதிவேடு நான் பதிவு செய்த ஆவணம் ஆகும். **அந்த விபத்து பதிவேடு அ.சா.ஆ.9 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** போலீசார் இது சம்மந்தமாக என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை –**

மனுவின் பேரில் குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.

என்னால் இத்திறந்த நீதிமன்றத்தில் எதிரி /எதிரிகளின் வழக்குரைஞர் முன்பு சாட்சி சொல்ல சொல்ல என்னால் சான்று மொழி எடுக்கப்பட்டு சாட்சிக்கு படித்து காட்டி சாட்சியால் சரி என்று ஒப்புக்கொண்ட பின்னர் கையொப்பம் பெறப்பட்டது என்றும் சான்றளிக்கிறேன்.

கூடுதல் மாவட்ட நீதிபதி
அருப்புக்கோட்டை.

Judicial Form No.53
(See Rule 42 )
**DEPOSITION OF WITNESS**
( Chapter XXIII Code of Cr.P.C )

IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE, ARUPPUKOTTAI

| | | |
|---|---|---|
| Calendar | : | |
| Miscellaneous | : | |
| Preliminary Register | : | |
| Sessions | : | Sessions Case No. 42/2020 |
| Deposition of Witness of PW | : | Prosecution PW 14 |
| | | Defence |
| | | Court |

Name : Dr.P.Manju Barkavi

Father / Husband Name : A.ரவீந்திரன்

Village : அருப்புக்கோட்டை

Taluk : அருப்புக்கோட்டை

Caste :

Calling : முதுநிலை குடிமை மருத்துவர்

Religion : இந்து

Age : 49

( எதிரி ஆஜர். )

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1869 (Central Act 44 of 1969 ) on the 16.09.2025.

**முதல் விசாரணை :-**

1. நான் அருப்புக்கோட்டை அரசு மருத்துவமனையில் முதுநிலை

குடிமை மருத்துவராக பணியாற்றி வருகிறேன். கடந்த 27.02.2019 அன்று பணிமருத்துவராக பணியிலிருந்தபோது சுப்பாரெட்டியார் மகன் 43 வயது மதிக்கதக்க கண்ணன் என்பவரின் உடலை பிரேத பரிசோதனை செய்ய வேண்டி திருச்சுழி காவல்நிலைய ஆய்வாளர் பொறுப்பை கூடுதலாக கவனித்து வந்த நரிக்குடி காவல்நிலைய ஆய்வாளர் அவர்கள் கொடுத்த வேண்டுகோள் கடிதத்தை பெற்று எம்.ரெட்டியபட்டி காவல்நிலைய குற்ற எண் 33/2019 என்ற வழக்கு தொடர்புடைய மேற்சொன்ன பிரேதத்தை பிரேத பரிசோதனை செய்ய வேண்டி காவலர் 1885 திரு.கணேஷ் அவர்கள் மூலம் பெற்று பிரேத பரிசோதனை நடவடிக்கையை மதியம் 2.00 மணியளவில் ஆரம்பித்தேன். பிரேதத்தை முதலில் நண்பகல் 12.20 மணியளவில் பார்த்தேன். அங்க மச்ச அடையாளங்களை சரிபார்த்தேன்.

2. அவரது உடல் விறைப்பு தன்மை அடைந்திருந்தது. அவரை பரிசோதித்தபோது அவருக்கு கீழ்கண்ட வெளிக்காயங்கள் காணப்பட்டன.

i. அவரது இடது கை மணிக்கட்டில் எலும்பு முறிவும், எலும்பு விலகியும் இருந்தன.

ii. வலது பக்க மணிக்கட்டில் எலும்பு முறிவு இருந்தது.

iii.வலது பக்க கையில் வீக்கமும், கை எலும்பு முறிவும் இருந்தது.

iv. அவருடைய வலது பக்க நடுக்காலில் சிராய்ப்பு காயம் இருந்தது.

v. அவருடைய இடது நடுக்காலில் சிதைந்த காயமும் வீக்கமும் இருந்தது.

vi. அவருடைய இடது பக்க கையில் வெட்டுக்காயம் 1X1X1 cm அளவில் வீக்கத்துடன் இருந்தது.

3. அவருடைய உள்ளுறுப்புகளை பரிசோதனை செய்ததில் நுரையீரல் சிவப்பு கலரிலும், வயிற்றில் 200 எம்எல் திரவமும், கல்லீரலும், சிறுநீரகமும் வெளிறிய நிறத்திலும், மூளை வெளிறிய நிறத்திலும்

இருந்தது. மண்டையோட்டில் எந்த காயமும் இல்லை. அவரது உள்ளுறுப்புகள் வேதியல் பரிசோதனைக்காக அனுப்பபட்டது. வேதியல் பரிசோதனைக்கு பின்னர் 28.03.2019 அன்று பெறப்பட்ட அறிக்கையின் அடிப்படையில் இறந்துபோன கண்ணன் அவருடைய வயிற்றில், குடலில், கல்லீரலில், சிறுநீரகத்தில் எவ்வித விஷத்தன்மையும் இல்லை என காணப்பட்டுள்ளது. அவருடைய இரத்தவகை B வகையை சேர்ந்தது என்றும் காணப்பட்டுள்ளது.

4. அவருடைய மரணத்திற்கு அவருக்கு ஏற்பட்ட பல்வேறு எலும்பு முறிவுகள் காரணமாகவும், நீர்ச்சத்து குறைபாடு காரணமாகவும், வலியின் காரணமாகவும் அதிர்ச்சி ஏற்பட்டு இறந்திருக்கலாம் என எனது கருத்துரையை வழங்கியுள்ளேன். **நான் வழங்கிய பிரேத பரிசோதனை அறிக்கை மற்றும் இறுதி கருத்துரை சான்று இரண்டும் சேர்த்து அ.சா.ஆ.10 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை –**

மனுவின் பேரில் குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.

என்னால் இத்திறந்த நீதிமன்றத்தில் எதிரி /எதிரிகளின் வழக்குரைஞர் முன்பு சாட்சி சொல்ல சொல்ல என்னால் சான்று மொழி எடுக்கப்பட்டு சாட்சிக்கு படித்து காட்டி சாட்சியால் சரி என்று ஒப்புக்கொண்ட பின்னர் கையொப்பம் பெறப்பட்டது என்றும் சான்றளிக்கிறேன்.

கூடுதல் மாவட்ட நீதிபதி
அருப்புக்கோட்டை.